**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

08.08.2025

O.S. No. 342/2023

P.W. 1 திரு. ரமேஷ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (4 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் அதிகாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனக்கு ஆங்கிலம் தொியுமா என்றால் தொியும். வா.சா.ஆ. 15 ஆவணத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளை பார்த்து கொள்வதற்கு மட்டும்தான் அதிகாரம் கொடுத்துள்ளது என்றாலும் வாதி சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரிதான். வழக்கு பட்டிகைச் சொத்துக்களின் முன் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது, தாக்கல் செய்துள்ளோம். முன் பத்திரங்களின் அசல் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களை பார்த்தால் முன் பத்திரத்தில் எவ்வளவு சொல்லப்பட்டுள்ளது, சொத்தின் விஸ்தீரணம் என்ன என்ற விவரங்கள் தொிய வரும் என்றால் சரிதான். இந்த வழக்கில்

சிதம்பரதாணுபிள்ளை என்பவர் ஷீலா மோசசஸ்க்கு என்பவருக்கு 27.06.1981 அன்று எழுதி கொடுத்ததாக சொல்லி நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை படித்து பார்க்காத காரணத்தினால் சொத்தின் விவரங்களை என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தையும் நான் படித்துப் பார்க்க வில்லை என்றால் சரியல்ல, நான் படித்துப் பார்த்துள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.